**பெந்தோட்ட பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

-----------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 செப்டம்பர் 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, பெந்தோட்ட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,037,861 இற்காக நிர்மாணவேலை மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பவற்றை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆண்டிற்கான முத்திரை கட்டணப் பெறுவனவுகள் ரூபா 3,110,870 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) 2017 ஆண்டின் போது சம்பளமற்ற விடுமுறைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 34,124 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்கள் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 19,917,622 தொகைக்கான 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே காணப்பட்ட சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 531,713 தொகையாகும்.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை காணப்பட்ட ரூபா 1,807,900 தொகைக்கான 08 நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2009 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 104,000 தொகைக்கான சம்பள மீளளிப்பு மற்றும் 2012 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 53,833 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 1993 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பான சபையின் முற்கொடுப்பனவுகள் ரூபா 169,278 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2013 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலப்பகுதியை சேரந்த ரூபா 6,349,223 தொகைக்கான நிர்மாண வேலை கடன்கொடுத்தோரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 1991 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரையான காலப்பகுதியைச் சேர்ந்த செலவு கடன்கொடுத்தோர் ரூபா 859,446 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 54,320,720 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) 1988 பிரதேச நிதி மற்றும் நிருவாக விதி | | |
| (i) விதி 33 | - | வீதி வரி செலுத்துவதை புறக்கணிப்பு நபர்கள் தொடர்பாக அட்டவணைகள் மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திரு க்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | விதி 145 | - | திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக விரிவான கூற்றொன்று தயாரித்து, பேரேட்டில் காட்டப்பட்டுள்ள மீதியுடன் சீராக்கல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (iii) | விதி 193 | - | பாதீட்டுடன் மிகைகள் மற்றும் பற்றாக்குறைக்கான காரணத்தை காட்டக்கூடிய கூற்றொன்று திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரித்து கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. |
| (iv) | விதி 218 | - | சபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொண் டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 110 | - | நட்டங்கள் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2)(அ) | 159,278 | 1993 ஆண்டு முதல் முன்கொண்டு வந்து காணப்படும் பொதுவான முற்பணக் கணக்கை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 571 | 386,923 | 02 வருட காலத்தை விட காலம் கடந்துள்ள வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

(அ) சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,949,889 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,686,524 தொகை ஆகக் காணப்பட்டது.

**(ஆ) நிதிக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காசு மாற்றல் கணக்கில் மீதிகள் ஒன்றிற்கு ஒன்று சமப்பட வேண்டுமெனினும், அவ்வாறு இன்மையால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 271,201 இற்கான வரவு மீதியொன்று காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 13,667,900 | 23,950,621 | 17,854,889 | 10,125,943 | 12,840,400 | 15,065,189 | 15,003,992 | 3,933,893 |
| (ii) வாடகை | 532,000 | 658,684 | 557,762 | 102,883 | 482,000 | - | 520,071 | 51,244 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 830,000 | 802,100 | 865,390 | 43,225 | 705,000 | - | 802,658 | 43,225 |
| | 15,029,900 | 25,411,405 | 19,278,041 | 10,272,051 | 14,027,400 | 15,065,189 | 16,326,721 | 4,028,362 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது ஒட்டுமொத்த மதிப்பீட்டு வருமானம் ரூபா 15,029,900 தொகை ஆகக் கணப்பட்டதுடன், மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட வருமானம் மற்றும் ஆண்டிற்கான நிலுவை வருமானத்துடன் சேகரிக்கப்பட வேண்டிய வருமானம் ரூபா 29,437,767 தொகை ஆகும். ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 19,278,041 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 10,272,051 ஆகும்.

### 2.2.3 வீதவரியும் வரியும்

மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட வருமானம் மற்றும் வருட ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை மீதியுடன் ரூபா 27,884,514 இற்கான சேகரிக்கப்பட வேண்டிய வருமானத்தில், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 17,854,889 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 10,125,943 தொகையாக காணப்பட்டது.

### 2.2.4 வாடகை

மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய வருமானம் ரூபா 709,928 தொகையில் சேகரிக்கப்பட்டவை ரூபா 557,762 தொகையாகக் காணப்பட்டதுடன் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 102,883 தொகையாகும்.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டிற்காக சேகரிக்கப்பட வேண்டிய வருமானம் ரூபா 845,325 தொகையில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 865,390 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் காணப்பட்ட நிலுவை மீதி ரூபா 43,225 தொகையாகும்.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 36,496,997 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,052,931 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்ட செய்பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைதத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) நிறைவேற்றப்படாத செய்பணிகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 அபிவிருத்தி திட்டத்தின் கீழ் எடவலவத்த ரபர்கஹமுள்ள பாதையில் மதகுக்கு அண்மையிலுள்ள பாதையை கொங்கிரீட் பண்ணும் நிர்மாண வேலைக்கு ரூபா 490,000 மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2018 ஜுன் அளவிலும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 ஆண்டின் போது கிராமிய பிரதேசங்கள் 1000 கி.மீ. பாதை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் தகனசாலைக்கு நுழைபாதைக்கு தார் போட்டு அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 6,000,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 ஆகஸ்ட் அளவிலும் செயற்திட்டதிற்கு அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

**(இ) எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ளாமை**

2016 ஆண்டிற்கான மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் நடமாடும் நூலக சேவைகள் ஆரம்பிப்பதற்காக நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 486,087 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், நடமாடும் நூலக சேவையின் தேவை பல பிரதேசங்களுக்கு இருந்த போதிலும் ஊரகஹ பகுதிக்கு மாத்திரம் ஒரு வாரத்திற்கு ஒரு நாள் நடமாடும் நூலக சேவை நடாத்தப்பட்டிருந்தது.

**(ஈ) குப்பை முகாமைத்துவம்**

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) குப்பை போடுவதற்காக நகரைச் சார்ந்த 4 ஏக்கர் 2 ரூட் 10 பர்சஸ் ஜம்புகஸ்வத்த ஒலிவல காணி பயன்படுத்தப்பட்டது. காணியில் ¼ பகுதி அளவு பரப்பில் குப்பைகள் வகைப்படுத்தப்படாமல் போடப்பட்டிருந்ததுடன், குப்பை போடப்பட்ட பின்னர் மண் போடப்பட்டு மூடப்படாமையால் பாரிய துர்நாற்றமொன்று வீசியது. 2017 ஆண்டின் போது குப்பை மூடுவதற்காக ரூபா 202,500 செலவிடப்பட்டிருந்தது. குப்பை போடும் காணிக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று பெற்றிருக்கவில்லை.

(ii) குப்பைகளை வகைப்படுத்துவதற்காக கொட்டில் ஒன்று நிர்மாணிப்பதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 450,000 தொகை ஒதுக்கியிருந்த போதிலும், அதற்காக போதியளவு இடவசதியுள்ள கொட்டில் ஒன்று நிர்மாணிப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கும் போது ரூபா 159,709 தொகை செலவிடப்பட்டு சிறிய கொட்டில் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த கொட்டில் குறிப்பிட்ட விடயங்களுக்காக போதியளானதாக காணப்படவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

---------------------------------------------------

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்காகிய உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகால திட்டம் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

--------------------------------------------

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

-------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆளணிக் கோப்பின் பிரகாரம் மிகை பதவியணி 09 ஆகக் காணப்படுவதுடன் வெற்றிடங்களின் எண்ணிக்கை 11 ஆகும். மிகைப் பதவியணியை முறைப்படுத்துவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு முரணாக மீளாய்வாண்டின் போது அமைய, பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 05 ஊழியர்களுக்காக சபை நிதியத்தில் இருந்து சம்பளங்கள் மற்றும் படியாக ரூபா 1,397,099 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) சபையில் கடமையாற்றும் 06 கனிஷ்ட பிரிவு ஊழியர்கள் அவர்களை சேர்க்கப்பட்ட பதவியை விட உயர்ந்த பதவிகளின் கடமைகளை மேவகை செய்வதற்கு நியமனம் செய்யப்பட்டிருந்தன.

**(ஆ) பதவியணிக் கடன்**

-----------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்றுள்ள, சேவையை விட்டுச் சென்றுள்ள இறந்த 27 உத்தியோகத்தர்களிடம்

அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 102,372 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

(ii) சபை ஊழியர்களினால் 2007 ஆண்டு முதல் பெற்றிருந்த ஆதனக் கடன் தொடர்பாக மீளளிப்பு செய்யப்பட வேண்டிய வட்டி ரூபா 130,326 தொகையினை உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து அறவீடு செய்திருக்கவில்லை.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பழைய சபையின் கட்டிடத் தொகுதியைச் சேர்ந்த இரண்டு மாடி நூலக கட்டிடம் 2007 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டுக் காணப்பட்டது. இந்த கட்டிடம் திருத்த வேலையின் பின்னர் பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்பட்டதுடன், கட்டிடத்தில் 09 மேசைகள் மற்றும் 12 கதிரைகள் ஆயுர்வேத மருந்தகத்திற்காக பயன்படுத்தப்பட்ட ஏந்தாணங்கள் 02 என்பன பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) சபைக்கு சொந்தமான ரூபா 7,188,800 தொகை பெறுமதியான 06 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் நூலகத்தின் பின்பகுதியில் காணப்பட்டது.

**3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் தகனசாலை 2017 ஆண்டின் போது ரூபா 1,274,250 தொகை செலவிடப்பட்டு திருத்தப்பட்டு 308 சடலங்கள் தகனம் செய்த பின்னர் 2017 ஜூன் 05 ஆம் திகதி தகனசாலை இயக்குனர் அல்லாத வேறு ஒருவரினால் இயக்கப்பட்டதினால் வெடித்துள்ளது. வெடிப்பின் பின்னர் தகனசாலையில் திருத்த வேலைகளுக்காக ரூபா 299,000 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் கணக்காய்விற்கு அறிவித்திருக்காததுடன், வெடிப்பின் மூலம் ஏற்பட்ட நட்டங்கள் சேதங்களை மதிப்பீடு செய்வதற்காக பரிசோதனை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான கப் வண்டி 2017 ஆண்டின் போது ரூபா 534,064 தொகை செலவிடப்பட்டு என்ஜின் முற்றாக திருத்தப்பட்டிருந்ததுடன், 2018 மார்ச் 24 ஆம் திகதி கடுகதி பாதையில் பிரயாணம் செய்த போதும் என்ஜின் செயலிழந்திருந்ததுடன், மீண்டும் செயற்படுத்த முடியாதிருந்தது. அச்சந்தர்ப்பத்தில் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் வழங்கியிருந்த உத்தரவாத காலம் முடிவடைந்து இருக்காத போதிலும், அந்த நிறுவனம் ஏற்றுக்கொள்ள மறுத்திருந்தது. இது தொடர்பாக சபை தொடர் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், கப் வண்டி 2018 ஆகஸ்ட் அளவில் வாகன முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு

ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) ஒரு செலவு விடயத்தில் மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்ததும், மேலும் 04 செலவு விடயங்களில் ரூபா 18,154,746 தொகைகள் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 03 செலவு விடயங்களில் பாதீட்டு எல்லையை மிகைத்து ரூபா 436,576 இற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அப்பெறுமதி 04 சதவீதம் முதல் 17 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது.

(இ) 02 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 18,127,877 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 15 சதவீதமும் 62 சதவீதமும் ஆகக் காணப்பட்டன.

## 4.2 உள்ளக கணக்காய்வு

தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்திருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை செயற்படுத்துதல்

2009 ஜூன் 09 ஆம் திகதி DMA/2009(i), இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2017 ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் ஒன்று மாத்திரம் நடைபெற்றிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | | கடந்த ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்படும் கணக்கு மீதிகளை தீர்த்திருக்காமை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படாமை. |
| | | (ii) | வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்காமை. |
| (இ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தியிருக்காமை. |
| | | (ii) | நிலுவை வருமானம் தொடர்பாக காலப்பகுப்பாய்வு ஒன்று தயாரித்திருக்காமை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | பதவியணி முகாமைத்துவம் | (i) மிகை பதவியணிகளை முறைப்படுத்துவதற்கும், வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்காமை.<br><br>(ii) ஊழியர் கடன் மீதிகளை அறவீடு செய்தவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| (உ) | ஒப்பந்த நிருவாகம் மற்றும் செயற்திட்ட தாமதம் செய்தல் | உடன்பட்டிருந்தவாறு ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்திருக்காமை. |
| (ஊ) | திண்மக் கழிவுக்பொருள் முகாமைத்துவம் | (i) வகைப்படுத்தி குப்பைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை.<br><br>(ii) சுகாதாரத்திற்காக பாதிப்பு ஏற்படாத வகையில் குப்பைகளை போடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |